மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : குழு அமைக்கின்ற யோசனை தற்போது இல்லை. இந்தக் கோரிக்கை பல ஆண்டுக் காலமாக கவனிக்கப்படாமல், இப்போதுதான் கவனிக்கப் பட்டிருக்கின்றது என்பதைத் தான் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். 1982 ஆம் ஆண்டிலிருந்து இந்தக் கோரிக்கை இருந்து வந்திருக்கிறது. 1990 ஆம் ஆண்டில்தான் நிறைவேறி யிருக்கிறது.

நாகப்பட்டினத்தில் புதிதாக நீதிமன்றம் அமைத்தல்.

* 4874—திரு. துரை சந்திரசேகரன் :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சை கிழக்கு பகுதிக்கு நாகப்பட்டினத்தில் புதிதாக ஒரு நீதிமன்றத்தை அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

9–15 மணி

திரு. துரை சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் நாகையில் அமைந்திருக்கின்ற நீதிமன்றம் வெள்ளையர்கள் காலத்தில் கட்டப்பட்ட ஒரு சிறிய கட்டிடத்தில் இயங்கி வருகிறது, வழக்குகள் நடைபெறுவதற்குத் தடையாகவும், கட்டிடம் பழுது அடைந்த நிலையில் இருப்பதாலும், போதிய கட்டிடம் கட்ட அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய மூலக் கேள்வி, தஞ்சை கிழக்குப் பகுதிக்கு நாகப்பட்டினத்திற்கு புதிதாக ஒரு நீதிமன்றம் அமைப்பதற்கான செயற்குறிப்பு இருக்கிறதா என்பதுதான். அதற்கு இல்லை என்று பதில்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1990 ஏப்ரல் 26]

அளிக்கப்பட்டிருக்கிறது. கட்டிடத்தைப் பற்றிக் குறிப்பு இல்லை. அதுபற்றி தனியாகக் கேள்வி கேட்டால், பதில் தரப்படும்.

திரு. கே. பிச்சாண்டி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாவட்டத்திற்கு ஒரு நீதிமன்றம் அமைக்கப்படுகின்ற கருத்து என்பது, புதிதாக துவக்கப் பட்ட திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தின் தலை நகரமாகிய திருவண்ணாமலைக்கும் பொருந்தும். அப்படி மாவட்ட நீதிமன்றம் அங்கு துவங்க காலதாமதம் ஆகும் என்பதால், வேலூரிலுள்ள செசன்ஸ் கோர்ட்டுகளில் ஒன்றை, திருவண்ணாமலைக்கு மாற்ற அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய யோசனை கவனத்தில் கொள்ளப்படும்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கு கேட்கப்பட்டிருக்கின்ற மூலக் கேள்வியில், நாகப்பட்டினத்தில் தஞ்சை கிழக்கு பகுதி வழக்குகளை கவனிப்பதற்கு நீதிமன்றமே இல்லாமல் இருப்பது போலவும், புதிதாக நீதிமன்றத்தை ஏற்படுத்த வேண்டு மென்றும் கேட்பது, பெரிதும் ஆச்சரியம் அளிக்கக்கூடிய முறையிலே அமைந்திருக்கிறது. இது தவறான நிலையை உருவாக்கிவிடும். நீண்ட நெடுங்காலமாக, மாவட்ட நீதி மன்றம் என்பது நாகப்பட்டினத்தில் செயல்பட்டுக் கொண்டி ருக்கிறது. இந்த மாவட்ட நீதிமன்றம், இதனுடைய உப நீதிமன்றங்கள் அங்கே இருந்து செயல்பட்டுக் கொண்டிருக் கின்றன. அந்த நீதிமன்றங்களுக்கு போதிய கட்டிட வசதி இல்லாமல் பழுது அடைந்த நிலையில் இருக்கின்றன. அந்த கட்டிடங்களைப் பழுது பார்த்து, உரிய கட்டிடங்களை ஏற் படுத்தித் தருவதற்கு அரசு முன் வருமா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் சொல்வது போல, நாகப்பட்டினம் பகுதியிலே கோர்ட் இல்லையோ என்ற சந்தேகம் வேண்டாம் என்பதற்காக இந்த விவரங்களைச சொல்ல விரும்புகிறேன்; உரிமை இயல் நீதிமன்றங்கள், மாவட்ட மற்றும் அமர் நீதிமன்றம், நாகப்பட்டினம் துணை நீதிமன்றம் நாகப்பட்டினம், துணைநீதிமன்றம், மயிலாடுதுறை; மாவட்ட உரிமை இயல் நீதிமன்றம், நாகப்பட்டினம்; மாவட்ட உரிமை இயல் நீதிமன்றம் திருத்துறைப்பூண்டி; மாவட்ட உரிமை இயல் நீதிமன்றம் திருவாரூர்

மாவட்ட உரிமை இயல் நீதிமன்றம், மயிலாடுதுறை, மாவட்ட உரிமை இயல் நீதிமன்றம், சீர்காழி மாவட்ட உரிமை இயல் நீதிமன்றம், நன்னிலம்.

குற்றவியல் நீதிமன்றங்கள் :

குற்றவியல் நடுவர் நீதிமன்றம் 1, நாகப்பட்டினம், குற்றவியல் நடுவர் நீதிமன்றம் 2, நாகப்பட்டினம், குற்றவியல் நடுவர் நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி, குற்றவியல் நடுவர் நீதிமன்றம், திருவாரூர், குற்றவியல் நடுவர் நீதிமன்றம் 1, மயிலாடுதுறை, குற்றவியல் நடுவர் நீதிமன்றம் 2, மயிலாடுதுறை, குற்றவியல் நடுவர் நீதிமன்றம், சீர்காழி.

மாண்புமிகு உறுப்பினர் கேட்டது போல, கட்டிடங்கள் கட்டுகின்ற முக்கியப் பிரச்சினை, நிதிநிலையை அனுசரித்து, போதிய கட்டிடம் கட்டப்படும்.

திரு. ரா. சொக்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காமராஜர் மாவட்டத்தில் மாவட்ட நீதிமன்றம் அமைப்பது குறித்து, அந்த மாவட்டத்திலுள்ள சிவகாசி, சாத்தூர், ஆகிய பகுதிகளிலுள்ள வழக்கறிஞர்கள் எல்லாம் கடந்த 2 மாதமாக நீதிமன்றத்திற்குச் செல்லாமல் புறக்கணித்து, தங்களுடைய கோரிக்கையை வலியுறுத்தி வருவது அரசுக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு தொடர்பில்லை ; தனியாக கேள்வி போட்டால் விவரம் அளிக்கலாம்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

ஆக்கிரமிப்பை அகற்றுதல்.

*3664 டாக்டர் எஸ். சுந்தரராஜ் :

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பரமக்குடியில் வைகை ஆற்றின் ஓரத்தில் உள்ள புறம்போக்கு ஆக்கிரமிப்பை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : துணைத் தலைவர் அவர்களே,